BUDGET 2025

# வலுவான துடிப்புமிக்க பொருளியலை உருவாக்குவது





"புத்தாக்கம் மூலம் நமது போட்டித்திறனை மேலும் வலுப்படுத்தவேண்டும். வட்டாரத்துடனும் உலகத்துடனும் நமது ஒருங்கிணைப்பை ஆழப்படுத்தி, வலுவான திறன்மிக்க ஊழியரணியையும் கட்டமைப்பதில் முதலீடு செய்ய வேண்டும். அதிகரித்து வரும் நிச்சியமின்மைக்கும் சாதகமற்ற வெளிச்சூழலுக்கும் இடையில் நமது வாழ்வாதாரத்தையும் மதிப்பையும் இவ்வாறு பெற முடியும்.

— துணைப் பிரதமர் மற்றும் வர்த்தக, தொழில் அமைச்சர் திரு கான் கிம் யோங்.



# உள்ளடக்கம்

வர்த்தகங்களுக்கான ஆதரவு
பக்கங்கள் 3-4

நமது பொருளியலை வளர்த்தல்
பக்கங்கள் 5-6

வளங்களின் ஆற்றலை வெளிப்படுத்துதல்
பக்கங்கள் 7-8

உள்ளூர் வர்த்தகங்களின் உருமாற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் ஆதரவு
பக்கங்கள் 9-10

உலகத்துடன் சிங்கப்பூரை இணைத்தல்
பக்கங்கள் 11-12

பயனுள்ள வளங்கள்
பக்கம் 13

# வர்த்தகங்களுக்கான ஆதரவு

## இது ஏன் முக்கியம்?

வளங்களில் ஏற்படும் தட்டுப்பாடுகளாலும் சவால்மிக்க வெளிச்சூழலாலும் வர்த்தகங்கள் முட்டுக்கட்டைகளை எதிர்நோக்கக்கூடும். குறுகியகால அழுத்தங்களை எதிர்கொள்ள அரசாங்கம், வர்த்தகங்களுக்குக் கைகொடுத்து அவற்றின் நீண்ட கால உருமாற்றங்களையும் வளர்ச்சியையும் ஆதரிக்கும்.

## வர்த்தகச் செலவுகளைச் சமாளித்தல்

- நிறுவனங்களுக்கு $40,000 வரையிலான ஆதரவு
  - 2025ஆம் மதிப்பீட்டு ஆண்டில் நிறுவனங்களுக்கு 50% நிறுவன வருமான வரித் தள்ளுபடி
  - 2024இல், குறைந்தது உள்ளூர் ஊழியர் ஒருவரைக் கொண்டுள்ள நிறுவனங்களுக்கு குறைந்தபட்சம் $2,000 ஆதரவு

## விதிமுறைகளையும் செயல்முறைகளையும் நெறிப்படுத்துதல்

- 1 ஜூலை 2025 முதல், வரிக்கு உட்பட்ட விற்பனையளவு $1 மில்லியனைத் தாண்டும் என்று கணிக்கும் வர்த்தகங்களுக்குப் பொருள், சேவை வரியைச் செலுத்த அளிக்கப்படும் கால அவகாசம் ஒரு மாதத்திலிருந்து இரண்டு மாதத்திற்கு நீட்டிக்கப்படும்.
- 1 ஜூலை 2025 முதல், பயன்படுத்திய பொருள்களை விற்கும் விற்பனையாளர்கள், சிங்கப்பூர் உள்நாட்டு வருவாய் ஆணையத்தின் ஒப்புதலுக்கான அவசியமின்றிப் பொருள், சேவை வரியை மொத்த லாப விகிதத் திட்டத்தின்கீழ் (Gross Margin Scheme) அமல்படுத்தலாம்.

## அரசாங்கக் கொள்முதல் வாய்ப்புகளை மேலும் வசதியாக்குதல்

- Innovative Procurement Partnership (IPP) எனப்படும் புத்தாக்கமிக்க கொள்முதல் பங்காளித்துவம் வர்த்தகங்கள் அரசாங்க அமைப்புகளோடு இணைந்து பணியாற்ற வகைசெய்யும் ஒரு புதிய கொள்முதல் முறை. அமைப்புகளின் தேவைகளை அறிந்து அவற்றுக்கான தீர்வுகளைத் தொடங்கவும் விரிவுபடுத்தவும் இந்தப் பங்காளித்துவம் உதவும்.
- $1 மில்லியனுக்கு மிகாத கட்டுமான ஏலக் குத்தகைகளுக்குக் குறைந்த நிர்வாக ரீதியான கட்டுப்பாடுகளைக் கொண்டுள்ள Tender Lite for Construction Contracts ஒப்பந்தத் திட்டம் மே 2025 முதல் நடப்புக்கு வரும்

## ஊழியரணி உருமாற்றத்திற்கான ஆதரவு

- ஊழியரணி உருமாற்றத் திட்டங்களுக்கான விண்ணப்ப செயல்முறையைச் சீரமைப்பதற்கான புதிய ஸ்கில்ஸ்ஃபியூச்சர் ஊழியரணி மேம்பாட்டு மானியத்தின்கீழ், வேலைகளை மறுவடிவமைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடும் நிறுவனங்களுக்கு 70% வரையிலான ஆதரவு.
- மறுவடிவமைக்கப்பட்ட ஸ்கில்ஸ்ஃபியூச்சர் தொழில்நிறுவன உதவி நிதியின்கீழ், தகுதிபெறும் நிறுவனங்களுக்குப் புதிதாக $10,000 நிதியை ஊழியரணி உருமாற்றத் திட்டங்களுக்கும் வகுப்புகளுக்கும் வழங்கும்.

## ஊழரியரணி ஆதரவை மேம்படுத்துதல்

- மேம்படுத்தப்பட்ட படிப்படியான சம்பள உதவித்தொகைத் திட்டத்தின்வழி, குறைந்த சம்பள ஊழியர்களுக்கான சம்பள உயர்வுகளை 2025லும் 2026லும் வழங்குவதில் முதலாளிகள் ஆதரவு பெறலாம்.
- நீட்டிக்கப்பட்ட மூத்தோர் வேலை நியமன நிதி, வேலை நியமன மேம்பாட்டு நிதி, உடற்குறையுள்ளோருக்கான வேலை நியமன திட்டம் ஆகியவற்றின்வழி மூத்த ஊழியர்கள், முன்னாள் சிறைக்கைதிகள், உடற்குறை உள்ளவர்கள் ஆகியோருக்கு ஆதரவு.



## எண்ணிக்கைகள் படி

# $40,000

நிறுவன வருமான வரித் தள்ளுபடி, ரொக்க மானியம் ஆகியவற்றுக்குத் தகுதிபெறும் நிறுவனங்களுக்கான மொத்த அதிகபட்ச ஆதரவு



# $10,000

மறுவடிவமைக்கப்பட்ட ஸ்கில்ஸ்ஃபியூச்சர் தொழில்நிறுவன உதவி நிதியின்கீழ், தகுதிபெறும் நிறுவனங்கள் ஊழியரணி உருமாற்றத்திற்குப் பயன்படுத்தலாம்.

# 40%

படிப்படியான சம்பளம் உதவித்தொகைத் திட்டத்தின்படி 2025ல் குறைந்த சம்பள ஊழியர்களின் சம்பள உயர்வுக்கு அரசாங்கத்தின் இணை நிதி ஆதரவு தரப்படும்.

கேபிஎம்ஜி (KPMG) ஆசிய-பசிஃபிக் பங்காளியும் தனியார் பங்குகளுக்கான தலைவருமான ஆன்ட்ரூ தாம்ப்சன்:

**"சிங்கப்பூரின் பொது மூலதனச் சந்தைகளின் ரொக்கப்புழக்கத்தையும் அகலத்தையும் வளர்ப்பது, வட்டார அளவிலும் உலக அளவிலும் நிதி மையாகத் திகழும் சிங்கப்பூரின் முக்கியத்துவத்தை மேம்படுத்துவதாகும். இந்நோக்கத்தை ஆதரிக்கக்கூடிய திட்டத்தை நாங்கள் வரவேற்கிறோம். அத்துடன், சிங்கப்பூரில் தொடங்கப்பட்ட வர்த்தகங்களின் வெற்றியை ஆதரிக்கும்."**

தனியார் வர்த்தக, வரி மற்றும் தொழில்தொடங்கு நிபுணர் பிடபிள்யூசி (PWC) சிங்கப்பூர் நிறுவனப் பங்காளி லிம் கேசின்:

**நிச்சியமற்ற சூழலால் வர்த்தகங்கள் எதிர்நோக்கும் பன்முகத்தன்மைமிக்க சவால்களை 50 விழுக்காடு வர்த்தக வரிக்கழிவின் நீட்டிப்பும் சிங்கப்பூரர்களை வேலையில் அமர்த்தும் வர்த்தகங்களுக்கான ரொக்கச் சலுகைகளும் அங்கீகரிக்கின்றன.**

**குறிப்பாக, வர்த்தகச் செலவுகளின் அழுத்தத்திற்கு உள்ளாகி, இடைக்கால புத்தாக்க முறைகளுக்கும் புதிய வாய்ப்புகளுக்கும் மாறும் சிங்கப்பூர் சிறிய, நடுத்தர நிறுவனங்களால் இது வரவேற்கப்படும்.**

# நமது பொருளியலை வளர்த்தல்



## இது ஏன் முக்கியம்?

பொருளியல் வளர்ச்சியின் அடுத்த கட்டத்திற்குச் செல்ல சிங்கப்பூர் தயாராகிக் கொண்டிருக்கையில் நாம் தொடர்ந்து நம் போட்டித்திறத்தைத் தொடர்ந்து வலுப்படுத்தவேண்டும். ஆழமான வட்டார கூட்டுறவு, புத்தாக்கம், வர்த்தக முதலீடு ஆகியவற்றின்வழி நாம் இதனைச் செய்யவேண்டும்.

## வட்டார இணைப்புகளை வலுப்படுத்துதல்

- ஜோகூர்- சிங்கப்பூர் பொருளியல் வட்டாரம் தொடர்பான ஒப்பந்தம் (Agreement on the Johor Singapore Special Economic Zone), மலேசியாவின் வளங்களைப் பயன்படுத்த சிங்கப்பூர் நிறுவனங்களுக்கு வகைசெய்யும். இது சிங்கப்பூர் நிறுவனங்களின் வளர்ச்சிக்கும் விரிவாக்கத்திற்கும் உதவும்.
- ஆசியான் மின்னிலக்க பொருளியல் கட்டமைப்பு உடன்பாடு (ASEAN Digital Economy Framework Agreement), மின்னிலக்க வர்த்தகத்தை மேம்படுத்தி, அந்த வட்டாரத்தில் இயங்கும் சிங்கப்பூர் நிறுவனங்கள் மற்ற சந்தைகளுக்கு மேலும் எளிதாக நுழைய வகைசெய்யும்
- ஆசியான் பொருள் வர்த்தக உடன்பாட்டுக்கான மேம்பாடு (ASEAN Trade in Goods Agreement (ATIGA) Upgrade, தளவாடத் தொடர்களை மேம்படுத்தி ஆசியான் வட்டாரத்திற்குள் வர்த்தக வரத்தை அதிகரிக்கும். வட்டார பொருளியலின் வளர்ச்சியைச் சிங்கப்பூர் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்த இந்த ஏற்பாடு வழிவகுக்கும்.

## வலுவான வர்த்தகங்களை வளர்த்தல்

- $500 மில்லியன் செலவில் உருவாக்கப்பட்ட தேசிய குறைகடத்தி நடத்துதல் மற்றும் புத்தாக்க நிலையம் (ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு), தனது அதிநவீச உள்கட்டமைப்பு வசதிகளை நிறுவனங்களுக்கு பகிரவுள்ளது. மேல்நிலை குறைகடத்தி தொழில்நுட்பங்களுக்கான செயலாக்கக்கூடிய ஆய்வு மேம்பாட்டை இது முடுக்கிவிடும். குறைகடத்தி மையமாக சிங்கப்பூரின் போட்டித்தன்மையை இது முன்னெடுக்கும்.
- குளோபல் இனோவேஷன் அலையன்ஸ் (Global Innovation Alliance) கட்டமைப்புக்குச் செய்யப்படும் மேம்பாடுகள் வழியாக, புதிய தொழில்முனைப்புகளைப் பங்காளிகளுடனும் வணிகமயமாகும் வாய்ப்புகளுடனும் இணைக்கப்படுகின்றன.
- குளோபல் நிறுவனர் திட்டம் (Global Founder Programme) மூலம் உலகளாவிய நிலையில் பெருவணிகங்களாக வளரக்கூடிய புதிய வர்த்தகங்களை சிங்கப்பூரில் அமைக்கும் அனுபவமிக்க வர்த்தக நிறுவனர்களுக்கு ஆதரவு.

## வர்த்தகங்களை ஆதரிக்கும் சூழலை வளர்த்தல்

- வர்த்தகங்களை ஆதரிக்கும் விதிமுறை மறுஆய்வுக்கான அமைச்சுகளுக்கிடையிலான குழு, மூன்று கடப்பாடு அறிக்கைகளை வெளியிட்டுள்ளது. வர்த்தக விதிமுறைகள் சம்பந்தப்பட்ட விண்ணப்பங்களுக்கான சேவை தரநிலைகளை மேம்படுத்தல், உரிமத்தை நீட்டித்தல், அடுத்தடுத்துப் பெறப்படும் அல்லது ஒரே வகை கட்டுப்பாட்டு உத்தரவுகளை சீரமைத்தலுக்காக இது செய்யப்படுகிறது.

## வளர்ச்சியை முன்னெடுப்பதற்கான தீர்வுகளுக்கு நிதியாதரவு வழங்குவது

- நீண்டகால வளர்ச்சிப் பாதையில் செல்லும் நிறுவனங்களுக்கு அரசாங்க மூலதனத்துடன் $200 மில்லியனுக்கு மேற்பட்ட நீண்ட கால முதலீட்டு நிதி.
- வழக்கமான வங்கிக் கடனையும் பங்குகள் வழியான நிதி வழங்குதலையும் தாண்டி நீக்குபோக்கான, மூலதனத்தை விட்டுக்கொடுக்காத தனிப்பயனாக்கப்பட்டத் தீர்வுகளை நாடும் அதிவேக வளர்ச்சியுள்ள நிறுவனங்களுக்கு $1 பில்லியன் மதிப்புள்ள தனியார் கடன் வளர்ச்சி நிதி

## எண்ணிக்கைகள் படி

# $123.6 பில்லியன்

சிங்கப்பூருக்கும் மலேசியாவுக்கும் இடையே 2023ல் நிலவிய இருநாட்டு வர்த்தகத்தின் பொருளியல் மதிப்பு



# >$200 மில்லியன்

நீண்டகால முதலீட்டுத் திட்டத்தின்கீழ் உள்ள நிறுவனங்களில் அரசாங்க முதலீடு

# 17.3%

சிங்கப்பூரின் பெயரளவிலான மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான உற்பத்தித் துறையின் பங்களிப்பு

மூலங்கள்:

[1]Singapore Department of Statistics (DOS), Feb 2024

[2]Singapore Department of Statistics (DOS), 2024

இன்னோவென் கேப்பிடல் நிறுவனத்திற்கான தென்கிழக்காசிய பங்காளி பால் ஓங்:

“தனியார் கடன்கள் வழியாக நிதியைப் பெறுவதை எளிதாக்குவதன் மூலம், உள்ளூர் நிறுவனங்கள் தங்களை மேலும் விரிவுபடுத்திக் கொள்ள இயலும். புத்தாக்கத்தை முன்னெடுத்து சிங்கப்பூரின் பொருளியல் வளர்ச்சிக்குப் பங்களிக்க முடியும்.

தற்போது நிறுவப்பட்டுள்ள தனியார் கடன் வளர்ச்சி நிதி, எங்களது முயற்சிகளை ஆதரிப்பதுடன் நிதித்திரட்டுக்கான மாற்றுவழிகளைக் காணும் முக்கியத்துவத்தை அடிக்கோடிடுகிறது.”

டிபிஎஸ் முதலீட்டு வங்கிக்கான உலகளாவிய தலைவர் க்லிஃபார்ட் லீ:

“சிங்கப்பூரின் தற்போதைய ஆற்றலை, கடன் சந்தைகளிலும் தனியார் மூலதனத்திலும் வங்கி நிதியியலிலும் ஆதரிப்பதன் மூலம் இந்த மேம்பாடுகள் நம் உள்ளூர் வர்த்தகங்களை வெளிநாடுகளிலும் சிறக்க உதவுகின்றன.

நம் நாட்டின் நிதியளிக்கும் திறனைப் பயன்படுத்தி தங்களது வளர்ச்சியைத் துரிதப்படுத்த முற்படும் வட்டார வர்த்தகங்களைக் கவரும் நமது ஆற்றலை இந்தப் புதியத் திட்டங்கள் அதிகரிக்கும்.

இதனால் படிப்படியாக முலதனங்கள் சேர்ந்து, துடிப்புமிக்க நிதி வழங்கும் வர்த்தகச் சூழல் உருவாகிறது.

# வளங்களின் ஆற்றலை வெளிப்படுத்துதல்

## இது ஏன் முக்கியம்?

2050க்குள் கரிம வெளியீட்டை முற்றிலும் நீக்கும் சிங்கப்பூரின் குறிக்கோளை நோக்கிச் செல்கையில் நிலம், மனிதவளம், கரிபொருள், எரிபொருள் ஆகியவற்றுக்கான தட்டுப்பாடுகளை எதிர்கொள்ளப் புத்தாக்கமிக்க தீர்வுகளை நாடுவோம். அதே நேரத்தில் நம் வர்த்தகங்களுக்குப் புதிய பாதைகளை வகுத்து நம் ஊழியரணியின் கனவுகளை நனவாக்க முற்படுவோம்.



## கரிம நீக்கத்துக்கான வழிமுறைகள்

- கரிமம் மீதான நம் சார்பினைக் குறைத்து சூரிய சக்தித் தொழில்நுட்பத்தைய அதிகப்படுத்தி மின்சாரத்தை இறக்குமதி செய்யும் திட்டங்களைச் செயல்படுத்தும் அதேநேரத்தில் கரிம பயன்பாட்டை இயன்றவரை குறைக்கும் தீர்வுகளை ஆராய்வது.
- பூட்டான், கானா, பப்புவா நியூகினி ஆகியவற்றுடன் செயல்பாட்டு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது. கரிம பயன்பாட்டு அனுமதிப் பத்திரங்களின் மாற்றத்திற்காக இது செய்யப்படுகிறது. பகுதி ஆறுடன்-உடன்படும் கரிம பயன்பாட்டு அனுமதிகளைத் தருவிப்பதற்கான வேண்டுகோள்களும் முன்வைக்கப்பட்டுள்ளன.
- 62.5 மில்லியன் வெள்ளி மதிப்பிலான குறைந்த கார்பன்-தொழில்நுட்ப இடம்பெயர்வு சோதனைத்தளம், குறைந்த கரிம தீர்வுகளை விரிவுபடுத்த முனையும் நிறுவனங்களை ஆதரிக்கும்.
- வருங்கால எரிசக்தி நிதிக்குக் கூடுதலாகச் சேர்க்கப்பட்ட 5 பில்லியன் வெள்ளி, கரிமம் குறைவாக உள்ள உள்கட்டமைப்பு முதலீடுகளை ஆதரிக்கும்.

## ஊழியர்களுக்காக முதலீடு செய்வது

- ஊழியர்களின் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளுக்காகவும் முக்கியமான துறைகளில் திறனாளர்களை வளர்ப்பதற்காகவும் தொடரும் கல்வி மற்றும் பயிற்சிக்கான திட்டத்திற்குத் தொடர்ந்து நிதி அளிப்பது.
- ஊழியரணி உருமாற்றம் செய்துவரும் நிறுவனங்களை ஆதரிப்பதற்கான புதிய ஸ்கில்ஸ்ஃபியூச்சர் ஊழியரணி மேம்பட்டுத் திட்டம்.
- வட்டாரப் பொருளியலையும் திறனாளர் வட்டங்களையும் எளிதில் அடைய சிங்கப்பூர் வர்த்தகங்களுக்கும் ஊழியர்களுக்கும் வகை செய்யும் தொழில்நுட்ப, புத்தாக்க திறன் பரிமாற்ற ஒப்பந்தங்கள்

## ஆய்விலும் புத்தாக்கத்திலும் முதலீடு

- ஏ*ஸ்டார் நிறுவனம், 500 மில்லியன் வெள்ளி முதலீடு செய்து, ஒன்-நார்த் வட்டாரத்தில் உள்ள அதன் உயிரியல் ஆய்வுக்கட்டமைப்பை விரிவாக்கி, புத்துணர்வூட்டி, புதிய பங்காளிகளை ஈர்த்து, அதிக அளவில் பல்துறை ஒத்துழைப்பை வளர்க்கும்.
- ஏ*ஸ்டார் மற்றும் அதன் பங்காளிகள், புதிதாக உயிரியில் மருந்து உற்பத்திக்கான ஆய்வு, மேம்பாட்டுத் திட்டங்களை அறிமுகம் செய்யும். சிங்கப்பூர் உயிரணு சிகிச்சைக்கான மேல்நிலை உற்பத்தித் திட்டம், துரிதப்படுத்தப்பட்ட செயல்முறை கொண்ட உயிரணுச் சிகிச்சை உற்பத்தி ஆகிய திட்டங்கள் இதில் அடங்கும்.

## மேம்படுத்தப்பட்ட நிலப் புத்தாக்கம்

- தொழில்த்துறை நிலத்துக்கான ஊக்கத்தொகை திட்டம் நீட்டிக்கப்பட்டும் மேம்படுத்தப்பட்டும் உள்ளது. இதன் வழியாக வர்த்தகங்கள் நிலப் பயன்பாட்டை தீவிரப்படுத்த முடியும்.
- ஐந்து ஆண்டுகளுக்கான நீக்குப்போக்குமிக்க குத்தகை நீட்டிப்புத் திட்டம் வழியாக 20 ஆண்டு ஜேடிசி குத்தகைகளில் உள்ள தகுதிபெறும் நிறுவனங்கள், தங்கள் குத்தகைகளை இரண்டு தவணைகளாக ஐந்து ஆண்டுகள் நீட்டிக்கலாம்.
- குத்தகைப் புதுப்பிப்புக்கான விண்ணப்பக் காலகட்டம், காலாவதியாகும் தேதிக்கு ஆறு ஆண்டுகளுக்குப் பதிலாக 10 ஆண்டுகளுக்கு முன்னதாக கொண்டு வரப்பட்டது
- வர்த்தகங்கள் கட்டடம் கட்டுவதற்கும் மேம்படுத்துவதற்குமான அவகாசத்தைத் தரும் விதமாக, பசுமைத்திட்ட தொழில்துறை நில ஒதுக்கீடுகளுக்கான வாடகைக் காலம் மூன்று ஆண்டுகள் நீட்டிப்பு
- தாவரங்களுக்கும் இயந்திரங்களுக்குமான முதலீடுகளின் வரையறை விரிவுபடுத்தப்பட்டு, புத்தாக்கம், ஆய்வு மற்றும் மேம்பாடு, மின்னிலக்கமயமாதல், அறிவுசார் சொத்து ஆகியவற்றின் உருவாக்கத்திற்கு கணக்காய்வுக்குட்பட்ட முதலீடுகளும் இதில் அடங்கும் வகையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

## எண்ணிக்கைகள் படி

# 1.5 கிகாவாட்-பீக்

2025 ஆம் ஆண்டுக்கான சிங்கப்பூரின் சூரிய ஆற்றல் இலக்கு, திட்டமிடப்பட்டதற்கு முன்பே 2024ம் ஆண்டு இறுதியில் எட்டப்பட்டது.



# $10 பில்லியன்

2025 ஆம் நிதியாண்டில் கூடுதலாக நிதி சேர்க்கப்பட்ட பின்னர் வருங்கால எரிபொருள் நிதிக்கான (Future Energy Fund) அளவு.

# >$1 பில்லியன்

வாழ்நாள் கல்வி மற்றும் பயிற்சிக்கான திட்டங்களில் தொடர்ந்து அரசாங்கம் செய்யவிருக்கும் செலவு.

# 24%

2022ஆம் ஆண்டில் ஆய்வு மற்றும் மேம்பாட்டு (R&D) செயல்பாடுகளை மேற்கொள்ளும் நிறுவனங்களின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான (GDP) பங்களிப்பு. இது 2012[1]ஆம் ஆண்டில் 14.8% ஆக இருந்தது;

மூலம்:[1]சிங்கப்பூர்ப் புள்ளிவிவரத் துறை

ப்ளூம்பர்க் நிறுவன தென்கிழக்காசியா தலைவர், கேல்வின் சென்:

**சிங்கப்பூர் ஏற்கெனவே புத்தாக்கத்திற்கும் மின்னிலக்கத் திறனுக்கும் மையமாகப் பெரும் பங்கு ஆற்றுகிறது. 'ஸ்கில்ஸ்ஃபியூச்சர் ஊழியரணி மேம்பாட்டு மானியம்' போன்ற திட்டங்கள், சிங்கப்பூரின் திறன்களை மேம்படுத்தி அடுத்த தலைமுறைக்கான தரவியல் மற்றும் தொழில்நுட்ப நிபுணர்களை உருவாக்கும் ஆற்றலை மேலும் வலுப்படுத்தும்.**

நியூ ரெலிக் மூத்த துணைத் தலைவர் மற்றும் ஆசியா-பசிபிக் மற்றும் ஜப்பான் பகுதியின் நிர்வாக இயக்குனர், சைமன் லீ:

**திறனாள்களை கண்டறியும் பணி தொடர்ந்து நடைபெறும் வேளையில், வர்த்தகங்கள் தங்கள்வசம் உள்ள அணிகளின் சக்தியை முழுமையாகப் பயன்படுத்துவது முக்கியமானது. திறன் மேம்பாட்டில் முதலீடு செய்வது, அறிவை பகிர்ந்துகொள்வதற்கான அமர்வுகளை ஊக்குவிப்பது, ஒவ்வொருவரது தனித்துவமான வலிமைகளை அரவணைப்பது ஆகியவை அவசியமாகும்.**

# உள்ளூர் வர்த்தகங்களின் உருமாற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் ஆதரவு



## இது ஏன் முக்கியம்?

இன்றைய வர்த்தகச் சூழலில் புதுமையும் சூழலுக்குத் தகவமைத்துக்கொள்ளும் ஆற்றலும் தேவைப்படுகின்றன. நிறுவனங்களின் உருமாற்றப் பயணங்களை அரசாங்கம் ஆதரித்துத் தொடர்ந்து உதவும்.

## அனைத்துலகமயமாதலை ஆதரிப்பது

- தொழில்தொடங்கு நிதி திட்டம்-வணிகக் கடன் (EFS-TL) இன் அதிகபட்ச கடன் தொகை, $5 மில்லியனிலிருந்து $10 மில்லியனாக நிரந்தரமாக அதிகரிக்கப்படும்.
- இரட்டிப்பு வரி கழிப்புக்கான உலகமயமாதல் திட்டத்தின் (DTDi) அறிவிப்பை 31 டிசம்பர் 2030 வரை நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது. இது தகுதிபெறும் சந்தை விரிவாக்கச் செலவுகளையும் முதலீடு மேம்பாட்டுச் செலவுகளையும் மேற்கொள்ள முற்படும் நிறுவனங்களுக்கு 200% வரி கழிப்பை கோர அனுமதிக்கின்றது.
- மேம்படுத்தப்பட்ட $100,000 மதிப்பிலான சந்தை தயார் உதவி (MRA) மானியம் 31 மார்ச் 2026 வரை நீட்டிக்கப்படுவதால், அனைத்துலக அளவில் வளர விரும்பும் நிறுவனங்களுக்குத் தங்களது திட்டங்களைச் செயல்படுத்த கூடுதல் நேரம் வழங்கப்படுகிறது.
- சிங்கப்பூர் சிறிய, நடுத்தர நிறுவனங்கள் வெளிநாட்டுச் சந்தைகளில் ஆதரவு பெறுவதற்காக எண்டர்பிரைஸ் சிங்கப்பூர் அமைப்பும் அதன் பங்காளிகளும் வட்டார அளவிலான கட்டமைப்பில் வெளிநாட்டு மையங்களை செயல்படுத்தும்.
- தொழில்முனைப்பு நிதித் திட்டம் - இணைதல் மற்றும் கையப்படுத்துதல் மேம்பாடு - சொத்து கையகப்படுத்துதலையும் (அறிவுசார் சொத்து, ஒப்பந்தங்கள் உட்பட) உள்ளடக்கும். இது 31 மார்ச் 2030 வரை நடப்பிலிருக்கும்.
- இணைதல் மற்றும் கையப்படுத்துதல் திட்டம் 31 மார்ச் 2030 வரை நீட்டிக்கப்படும். இத்திட்டத்தின்வழி சாதாரண பங்குகளை கையகப்படுத்த முற்படும் சிங்கப்பூர் நிறுவனங்கள், வரிசார்ந்த நன்மைகளைப் பெறுகின்றன.

## செயற்கை நுண்ணறிவு உருமாற்றத்திற்கு ஆதரவு

- தொழில்நிறுவன கணினித் திட்டம் (Enterprise Compute Initiative), தகுதிபெறும் நிறுவனங்களுக்கு மேகக் கணினி சலுகைகள், பயிற்சித் திட்டங்கள், செயற்கை நுண்ணறிவுத் தீர்வுகளை உருவாக்கி விரிவு செய்வதற்கான ஆலோசனை சேவைகள்.
- செயற்கை நுண்ணறிவைத் தழுவும் சிறிய நடுத்தர நிறுவனங்களுக்கு, உற்பத்தித்திறன் தீர்வுகள் மானியம் (Productivity Solutions Grant), மின்னிலக்கமயமாதல் திட்டம் போன்றவற்றின்வழி தொடர் ஆதரவு.

## நிறுவனங்களுக்கான சுற்றுச்சூழலை மேம்படுத்துதல்

- சிறிய வர்த்தக நிறுவனங்களை ஆதரிக்கும் வர்த்தக ஆதரவு அலுவலகம், விதிமுறைகளைப் பின்பற்றுவதில் ஏற்படும் சிரமத்தைக் குறைத்து பொது அமைப்புகள் வழங்கும் கருத்துகளை ஆராயும்.
- சிறிய நடுத்தர நிறுவனங்களுக்குமான மேம்பட்ட நடுவங்கள் இன்னும் விரிவான வர்த்தக சேவைகளையும் திட்டங்களையும் வழங்கும்.
- கோபிஸ்னஸ் இணையத்தளம் மற்றும் எண்டர்பிரைஸ் எஸ்ஜியின் வர்த்தக மானியங்கள் இணையத்தளம் போன்ற மின்னிலக்கத் தளங்களின் அனுபவங்களை சீரமைத்தல்

## குடியிருப்பு வட்டார நிறுவனங்களுக்கு உந்துதல்

- குடியிருப்பு வட்டார கடைகள் தங்கள் கடைகளைப் புதிப்பிக்கவும் மேலும் அதிக வாடிக்கையாளர்களை ஈர்க்கவும், $12,000லிருந்து $60,000க்கு அதிகரிக்கப்பட்ட தகுதிச் செலவுடனான மேம்படுத்தப்பட்ட காட்சி வணிகத் திட்டம்
- குடியிருப்பு வட்டாரங்களை மெருகூட்ட வளாகங்களில் நடவடிக்கைகளும் வெவ்வேறு அளவிலான நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்யவும் ஆதரவு வழங்க கடைக்காரர்கள் சங்கத்துக்கான துடிப்புமிக்க அக்கம்பக்கத் திட்டம்

## எண்ணிக்கைகள் படி

# கிட்டத்தட்ட 3,000

உற்பத்தித்திறன் தீர்வுகள் மானியம் மூலம் செயற்கை நுண்ணறிவு தீர்வுகளைப் பெற்ற சிறிய, நடுத்தர நிறுவனங்களின் எண்ணிக்கை



# 23,000

சிடிசி பற்றுச்சீட்டுத் திட்டத்தால் பலனடைந்த அக்கம்பக்கக் கடைகளும் உணவங்காடி நிலையக் கடைகளும்

# $8.8 மில்லியன்

2024[1] ஆம் ஆண்டு அனைத்துலகமயமாதல் திட்டங்களை அரவணைத்த நிறுவனங்களில் தலா ஒவ்வொரு நிறுவனமும் ஏறக்குறைய ஓராண்டு வருமானத்தில் ஊக்கம் பெற்ற தொகை

மூலம்: [1]எண்டர்பிரைஸ்எஸ்ஜி வருடாந்திர ஊடகக் கூட்டம் (ஜனவரி 2025)

ராண்ட்ஸ்டாட் சிங்கப்பூர் நாட்டு இயக்குநர், டேவிட் பிளாஸ்கோ:

> அமைப்புகளுக்கு இந்த $10,000 ஸ்கில்ஸ்ஃபியூச்சர் தொழில்நிறுவன உதவிநிதி மகிழ்ச்சியளிப்பதாக உள்ளது. ஊழியரணி உருமாற்ற உத்தியை முன்னெடுத்துச்செல்ல முதலாளிகள் மேலும் அதிக முயற்சி எடுக்க அது ஊக்கப்படுத்தும்.
>
> மேலும் சுறுசுறுப்பான ஊழியரணியாக உருமாற்றும் பயணத்தில் ஊழியர்களின் திறன்களை வலுப்படுத்த இது அவர்களுக்கு அதிக கால அவகாசத்தை வழங்கும். செயற்கை நுண்ணறிவு மற்றும் வளர்ந்துவரும் தொழில்நுட்பங்களின் மேம்பாட்டுடன் ஒத்துப்போக இது அத்தியாவசியமான ஒன்று.

கேபிஎம்ஜி சிங்கப்பூர் பங்காளிகள், அஜய் குமார் சங்கனெரியா மற்றும் ஹார்வி கொனிக்:

> இந்த ஆண்டின் பெரிய அளவிலான ஆதரவு, மாறிவரும் உலகளாவிய வரி சூழலில் வரி அல்லாத ஊக்குவிப்புகள் மூலம் முதலீடுகளை ஊக்குவிப்பதிலும் வர்த்தக உற்பத்தித் திறனை மேம்படுத்துவதிலும் சிங்கப்பூரின் தொடர்ந்த கவனத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

# உலகத்துடன் சிங்கப்பூரை இணைத்தல்

## இது ஏன் முக்கியம்?

ஒரு தேசமாக சிங்கப்பூரின் வெற்றி வர்த்தக வெளிப்படைத்தன்மையையும் திறனையும் சார்ந்துள்ளது. நமது வலுவான அடித்தளத்தை அரவணைத்து தொடர்புத்திறனை மேம்படுத்தவும் வாய்ப்புகளை விரிவுபடுத்தவும் மக்கள், வர்த்தகம், முதலீட்டு வரத்துகளுக்கு நுழைவாயிலாக சிங்கப்பூரின் பங்கை வலுப்படுத்தவும் முனைவோம்.

## சுற்றுலாத்துறை தெரிவுகளை மேம்படுத்துதல்

- வனவிலங்கு, இயற்கை ரசிகர்களுக்கு பலதரப்பட்ட தெரிவுகளை மேம்படுத்த மாண்டாய் போர்ட்வாக், ரெயின்ஃபாரஸ்ட் வைல்ட் ஏஷியா மற்றும் மாண்டாய் ரெயின்ஃபாரஸ்ட் ரிசோர்ட் பை பான்யான் ட்ரீ போன்ற மாண்டாய் அக்கம்பக்கத்துக்குப் புதிய அம்சங்கள்.
- பத்தாண்டுகளுக்குள் உலகத் தரம் வாய்ந்த வசதிகளையும் கன்கவர் இடங்களையும் ஒருங்கிணைந்த விடுதிகள் அறிமுகப்படுத்தும்.
- வலுவான அளவில் பொழுதுபோக்கு, வாழ்வியல், வர்த்தக நிகழ்வுகள் 2025ஆம் ஆண்டில் 17 மில்லியன் முதல் 18.5 மில்லியன் அனைத்துலக வருகையாளர்களை ஈர்க்கும் என்றும் $29 பில்லியன் முதல் $30.5 பில்லியன் சுற்றுப்பயண வரவுகளை ஏற்படுத்தும் என்றும் கணக்கிடப்பட்டுள்ளது.

## தற்போதைய வர்த்தக உறவுகளை ஆழப்படுத்துதல்

- ஆசியான்-சீனா தடையற்ற வர்த்தக வட்டாரம், பசுமைப் பொருளியலுக்கான ஆசியான் கட்டமைப்பு உடன்பாடு, ஆசியான் பொருள் வர்த்தக உடன்பாடு ஆகியவை மூலம் வட்டாரப் பொருளியல் ஒருங்கிணைப்பை ஆழமாக்குவது
- அமெரிக்கா, சீனா, இந்தியா, வியட்னாம், மலேசியா ஆகிய நாடுகளுடன் இருதரப்புப் பொருளியல் உறவை வலுப்படுத்துவது

## புதிய சந்தைகளுக்கும் துறைகளுக்கும் விரிவுபடுத்துதல்

- லத்தீன் அமெரிக்கா, மத்தியக் கிழக்கு, ஆப்பிரிக்க சந்தைகளுடன் பொருளியல் பங்காளித்துவம் ஏற்படுத்துவதுடன் எல்லைகள் தாண்டி வர்த்தகத் தலைவர்களை இணைப்பது.
- இருதரப்பு மின்னிலக்கப் பொருளியல் ஒப்பந்தங்கள், மின்னிலக்கப் பொருளியல் பங்காளித்துவ உடன்பாடு போன்ற பலதரப்பு ஒப்பந்தங்கள், மின்னிலக்கப் பொருளியலுக்கான உலக வர்த்தக நிறுவனத்தின் கூட்டறிக்கை முயற்சிகள் ஆகியவற்றின் மூலம் மின்னிலக்கப் பொருளியலில் வர்த்தகப் பங்காளித்துவத்தை விரிவுபடுத்துவது.
- புத்தாக்கம், தொழில்நுட்பம், நீடித்து நிலைக்கத்தக்க பொருள்கள், ஆற்றல் தொடர்பான வர்த்தக மேம்பாடு, பசுமை வளர்ச்சித் துறைகளை ஆதரிக்க, ஒன்றோடொன்று இயங்கக்கூடிய கட்டமைப்புகளை உருவாக்குதல் ஆகியவற்றுக்கான ஆற்றல் பொருளியல் ஒப்பந்தம்.



## எண்ணிக்கைகள் படி

# $22.4 பில்லியன்

2024ஆம் ஆண்டின் முதல் மூன்று காலாண்டுகளில் சிங்கப்பூர் சுற்றுலாத் துறையின் வருவாய் வரலாறு காணாத உச்சத்திலுள்ளது.

# 17-18.5 மில்லியன்

2025ஆம் ஆண்டு ஓய்வு, பொழுதுபோக்கு, வணிக நிகழ்ச்சிகளுக்காக சிங்கப்பூருக்கு வருவதாக எதிர்பார்க்கப்படும் எண்ணிக்கை

# 27

மார்ச் 2025 வரை நடப்புக்கு வந்துள்ள தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்கள் (FTAs)



சிங்கப்பூர் தொழில்முனைவோர் எல்லைகள் தாண்டி விரிவடையத் தயங்குவது பற்றிக் கூறிய சிறிய, நடுத்தரத் தொழில்நிறுவனங்கள் சங்கத் தலைவர் ஆங் யுயிட் கூறுகையில்:

**“மக்களுக்கு சிங்கப்பூரின் எல்லைகளைத் தாண்டிய விழிப்புணர்வு ஏற்படுத்துவதுடன், சிங்கப்பூரை வெறும் நாடாக மட்டுமின்றி, ஆசியானின் தலைநகராகப் பார்க்கத் தொடங்கினால் இந்நிலை மாறும் எனக் கருதுகிறேன்,” என்றார்.**

கூடுதல் தகவல்களுக்கு கீழ்க்காணும் இணையத்தளங்களைப் பார்வையிடலாம்.
வரத்தக, தொழில்துறை அமைச்சினைத் தொடர்புகொள்ள: mti_email@mti.gov.sg

## GoBusiness

தொழில்நிறுவனங்களுக்கான ஆதரவு குறித்த கூடுதல் தகவல்களுக்கு gobusiness.gov.sg இணையத்தளத்தில் உள்ள ‘GoBusiness இணையவாசலின் மூலம் தெரிந்துகொள்ளலாம். திட்டங்களுக்குத் தங்கள் நிறுவனங்கள் தகுதிபெறுகின்றனவா என்பதை அரசாங்க உதவித்திட்டங்களின் மின்னிலக்க ஆலோசனைத் தளத்தில் சில எளிய கேள்விகளுக்கு விடையளிப்பதன் மூலம் தெரிந்துகொள்ளலாம்.

## தலைமைத் தொழில்நுட்ப அதிகாரியின் சேவை

நிறுவனங்களின் மின்னிலக்கத் தயார்நிலையைச் சுய மதிப்பீடு செய்யவும், மின்னிலக்கமயமாதலில் உள்ள இடைவெளிகளைக் கண்டறிந்து தனிப்பயனாக்கப்பட்ட தீர்வுகளைக் காணவும் இந்த இணையத்தளத்தை நாடலாம்: services2.imda.gov.sg/CTOaaS தகுதிபெறும் நிறுவனங்கள், உரிய ஆலோசகர்களிடமிருந்து மின்னிலக்கம் சார்ந்த ஆலோசனைச் சேவைகளையும், திட்ட மேலாண்மை ஆதரவுகளையும் பெறலாம்.

## சிறிய, நடுத்தரத் தொழில்நிறுவன நிலையங்கள்

வர்த்தக வளர்ச்சிக்கு ஆதரவளிக்கும் விதமாகச் சிறிய, நடுத்தரத் தொழில்களுக்குத் தனித்தனியே வர்த்தக ஆலோசனை அமர்வுகள், திறன் மேம்பாட்டுப் பயிலரங்குகள், குழு அடிப்படையில் அமையும் மேம்பாட்டுத் திட்டங்கள் உள்ளிட்டவை வழங்கப்படவுள்ளன. அருகில் உள்ள சிறிய, நடுத்தரத் தொழில்நிறுவன நிலையங்களில் அனுபவம் மிக்க வர்த்தக ஆலோசகர்கள் வழங்கும் ஒரு இலவச ஆலோசனை அமர்வில் பங்கேற்க இந்த இணைப்பில் முன்பதிவு செய்யலாம்: enterprisesg.gov.sg/smecentre.

## புத்தாக்க மையங்கள்

சிறிய, நடுத்தரத் தொழில்களின் தொழில்நுட்பப் புத்தாக்கங்களை மேம்படுத்தும் நோக்கில் உயர் கல்வி நிறுவனங்கள், ஆய்வு நிறுவனங்களுடன் இணைந்து புத்தாக்க மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இம்மையங்கள், குறிப்பிட்ட துறைகளில் தொழில்நுட்பத் திட்டங்களை உருவாக்கவும் சோதிக்கவும் நிறுவனக்களுக்குத் தேவைப்படும் வசதிகள், ஆலோசனைகள், பயிற்சிகள், தொழில்நுட்ப சேவைகளை வழங்கும். மேலும் தகவல்களுக்கு இந்த இணையதளத்தை நாடலாம்: go.gov.sg/centres-of-innovation

## தொழில்நிறுவனங்களுக்கான நிதி அமைச்சின் ஆதரவுத் திட்டங்கள்

விதிகள், செயல்முறைகள் ஆகியவற்றை எளிமைப்படுத்துதல், அரசாங்கக் கொள்முதல் வாய்ப்புகளை அனைவருக்கும் வசதியாக மாற்றியமைத்தல் ஆகியவற்றின்மூலம் அரசாங்கம் தொழில்நிறுவனங்களுக்கு ஆதரவான சூழலை எவ்வாறு அமைக்கின்றது என்பதை அறிந்துக்கொள்ளுங்கள். மேல்விவரங்களுக்கு go.gov.sg/mof-cos2025-infographics இணையப்பக்கத்தை நாடுங்கள்.



MTI MINISTRY OF TRADE AND INDUSTRY SINGAPORE